**24. அதிபத்த நாயனார் கதை**

சோழவள நாட்டில் நாகபட்டினத்தில் கடற்கரை யிலே நுளைப்பாடியில்பரதவர் குலத்தில் அதிபத்த நாய னார் தோன்றினார். இவர் பரதவர்களுக்குத் தலைவர். பரத வர்கள் பிடிக்கும்மீன்களில் பகுதி பெற்று வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார். இவர் இறைவனிடத்திலே மிகுந்தஅன்புடையவர்.



அகப்படும் மீன்களிலே அழகிய ஒரு மீனை, "இது பரமசிவனுக்கு" என்று மிகுந்த அன்பி னோடுகடலில் விட்டு வந்தார். ஒரு நாளில் ஒரு மீனே அகப்பட்டாலும் அதனைப் பரமசிவனுக்கு என்று விட்டு விடுவார். இவ்வாறு நடந்துகொண்டு வரும் நாட்களில் அடுத்தடுத்துப் பல நாட்களில் ஒவ்வொரு மீனே அகப்பட அவ்வாறு அகப்படுவதனையுங் கடலில் விட்டு வந்தார். இதனால் இவருடைய பொருள் வருவாய் குறைந்தது. உறவினர்கள்உணவுக்கு வருந்தினார்கள். இவரோ தாம் ஒரு சிறிதும் வருந்தாது தம்முடைய உறுதிச் செயலை நாளும்நடத்திக்கொண்டே யிருந்தார். ஒரு நாள் வலைஞர்கள் விலை மதிப்பற்ற ஓரழகிய மீனைப் பிடித்துக்கொண்டுவந்தார்கள். அம்மீன் கதிரவன் தோன்றினாற்போல் பேரொளியுடன் விளங்கியது. அதனுடைய உறுப்புக்கள்யாவும் ஒன்பான் வகை மணிகளால் இயன்றவை போலத்திகழ்ந்தன. அதிபத்தர் அம்மீனைக் கண்டு வியந்தார். இவ்வழகிய மீன் எம்பெருமானுக்குரியதாகுக" என்று கூறிக் கடலில் விடுத்தார். இதனால் இவருக்குத் திருவடிப் பேறு கிட்டியது. அகப்படு மணிமீன் அரற்கென விடுத்தும்*

(சிவத்தொண்டு (நால்வர் நான் மணிமாலை )